## அரக்கோணம் நகராட்சி
## அவசர மன்ற கூட்ட அறிவிப்பு

கூட்ட எண்.38 நாள் 10.12.2018.

பொருள் : அவசர மன்றக் கூட்டம் – அரக்கோணம் நகராட்சி – நாள் 11.12.2018 செவ்வாய் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கூட்டம் நடைபெறுதல் – சம்மந்தமாக.

அரக்கோணம் நகராட்சி 11.12.2018 செவ்வாய் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைபெற உள்ள அவசர மன்ற கூட்டத்தில் கொண்டு வரப்படவுள்ள மன்றப்பொருள் விவரம்.

ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்(பொ)
அரக்கோணம் நகராட்சி

**பொருள் எண் :01**

தூய்மை பாரத இயக்கம் – 2016–17ன் கீழ் அரக்கோணம் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள கீழ்காணும் பணிகளை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி **29.11.2018** அன்று கோரப்பட்டு தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டு கூராய்வு செய்யப்பட்டதில் வரப்பெற்ற அனைத்து ஒப்பந்தப்புள்ளிகள் தகுதி பெற்றதை தொடர்ந்து **10.12.2018** அன்று விலைவிகித ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது

| சிப்பம் | பணியின் பெயர் | மதிப்பீடு லட்சத்தில் | மதிப்பீட்டைவிட குறைந்த சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | | மதிப்பீட்டைவிட அதிக சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | |
|---|---|---|---|---|---|---|
| 1. | 2. | 3. | 4. | 5. | 6. | 7. |
| 1 | 2 | | ஒப்பந்த தாரார் பெயர் | சத விகிதம் | பெயர் | அதிக சத விகிதம் |
| 1. | Construction of Micro Compost Center at Rajiv Gandhi Nagar with Processing Capacity of 4 TPD | 52.00 | ---- | | M/S. எம்.எச்.டி இன்ஜீனியரிங் | 4.82% |
| | | | | | M/S.எஸ்.எஸ்.ஜெயீ இன்ஜீனியரிங் | 6.46% |
| 2. | Construction of Micro Compost Center at Rathan Chand Nagar with Processing Capacity of 4 TPD | 52.00 | ---- | | M/S. எம்.எச்.டி இன்ஜீனியரிங் | 4.81% |
| | | | | | M/S.எஸ்.எஸ்.ஜெயீ இன்ஜீனியரிங் | 6.43% |
| 3. | Construction of Micro Compost Center at Somasundaram Nagar with Processing Capacity of 4 TPD | 61.75 | ---- | | M/S. எம்.எச்.டி இன்ஜீனியரிங் | 4.76% |
| | | | | | M/S.எஸ்.எஸ்.ஜெயீ இன்ஜீனியரிங் | 6.06% |
| 4. | Resource Recovery Center at Silverpet Compost yard | 30.00 | --- | | திரு.எஸ்.ரமேஷ்பாபு | 4.92% |
| | | | | | திரு.டி.சரவணன் | 7.46% |
| 5. | Construction of Compound wall at Silverpet Compost yard | 88.15 | | | திரு.எஸ்.ரமேஷ்பாபு | 4.96% |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | திரு.டி.சரவணன் | 5.50% |

சிப்பம் –I முதல் சிப்பம் –V வரையிலான பணிகளுக்கு வரப்பெற்ற இரு விலைவிகித ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டை விட அதிகமாக உள்ளதால் அதில் குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளவர்கள் விவரம்.

1. சிப்பம் –I M/S. எம்.எச்.டி இன்ஜீனியரிங் – 4.82%
2. சிப்பம் –II M/S. எம்.எச்.டி இன்ஜீனியரிங் – 4.81%
3. சிப்பம் –II M/S. எம்.எச்.டி இன்ஜீனியரிங் – 4.76%
4. சிப்பம் –IV M/S. திரு.எஸ்.ரமேஷ்பாபு – 4.92%
5. சிப்பம் –V M/S. திரு.எஸ்.ரமேஷ்பாபு – 4.96%

மேற்படி ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, திட்டப் பணியின் அவசிய அவசரத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்**

**ந.க.எண்.1307/2017/இ1**

**பொருள் எண் :02**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–05 அவர்களின் செயல்முறை ஆணை எண்.13277/2018/WS1 நாள்.03.07.2018 கடிதத்தின்படி அரக்கோணம் நகராட்சியில் 2519 எண்ணிக்கை புதிய குடிநீர் இணைப்புகளை (Internal Plumbing of Water Supply House Service Connections) தெருவில் உள்ள பகிர்மானக் குழாயிலிருந்து வீடு வரை குழாய் பதித்து தர மதிப்பீடு மதிப்பீடு ரூ.90 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்நிலையயில் TUFIDCO, Chennai அவர்களின் கடித எண்.TUFIDCO/URF18-19-40ULBs/AM(M)/2018 நாள்.07.12.2018ல் கடிதத்தில் அரக்கோணம் நகராட்சியில் 2519 எண்ணிக்கை புதிய குடிநீர் இணைப்புகளை (Internal Plumbing of Water Supply House Service Connections) வழங்குதல் பணிக்கு வட்டியில்லா கடனாக ரூ.85.15 இலட்சம் வழங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணியின் மொத்த மதிப்பீட்டில் ரூ.96.00 இலட்சத்தில் ரூ.85.15 இலட்சம் (TUFIDCO Loan) போக மீதமுள்ள தொகை ரூ.4.85 இலட்சத்தை நகராட்சியின் குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின்அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்.245/2018/இ1**

**பொருள் எண் :03**

1. Resolved that Arakkonam Municipalityis authorizing the authorized signatory to borrow the interest free loan of Rs.85.15 Lakh (Rupees only) from TUFIDCO for 'Provision of Internal Plumbing for HSC (Minimum 2519 Nos) for making optimum utilization of Water supply at Arakkonam Municipality' under Revolving fund of UIDSSMT as per the terms and conditions prescribed by TUFIDCO.

2. The authorized signatory be and hereby authorized to execute the loan agreement and other documents if any with TUFIDCO and complete all the other formalities including affixing of the common seal of Arakkonam Municipality on the documents to be executed with TUFIDCO on behalf of Arakkonam Municipality

3. Resolved to repay the interest free loan as per the repayment schedule in the agreement.

4. Resolved to adhere to time line as envisaged DPR.

5. Resolved that Arakkonam Municipality is authorizing the authorized signatory to make necessary budgetary provisions in Arakkonam Municipality's annual budget for the repayment of principal for the project proposals to TUFIDCO and is hereby confirmed that all dues will be paid in time without default for creating sustainable revolving fund.

6. Resolved that Arakkonam Municipality is authorizing the authorized signatory to open and operate an ESCROW account for Water Supply in favour of TUFIDCO till the repayment of Loan.

**அலுவலகக்குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்.245/2018/இ1**

**பொருள் எண் :04**

அரக்கோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட கதவு எண்.29/15 தாசில்தார் தெருவில் திருமதி. D.சுகன்யா என்பவர் தரைத்தளம் மட்டும் கட்ட அனுமதி பெற்றும், அனுமதியில்லாமல் கூடுதலாக முதல்தளம், இரண்டாம்தளம், மூன்றாம்தளம் (ம) நான்காம் தளம் கட்டிடம் கட்டியுள்ளதற்கு திரு. கே.முனிரத்தினம் என்பவரால் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு W.P.17945/ 2017 தொடரப்பட்டு வாதிக்கு சாதகமாக தீர்ப்புரை வழங்கப்பட்டு, பிரதிவாதி (R4) திருமதி சுகன்யா என்பவரால் உச்ச நீதி மன்றத்தில் மேல்முறையீடு (SLP(Civil)27222/2010)செய்யப்பட்டுள்ளது. மேற்படி மேல்முறையீட்டு வழக்கில் நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களை 2–வது பிரதிவாதியாகவும்,ஆணையர் அவர்களை 3வது பிரதிவாதியாகவும், நகர அமைப்பு அலுவலர் அவர்களை 4வது பிரதிவாதியாகவும் சேர்க்கப்பட்டுள்ளது. வழக்கினை சென்னை உயர்நீதிமன்றத்தில் நகராட்சி சார்பாக ஆஜராகிய திரு. S.S. சுவாமிநாதன் மூலம் உச்சநீதிமன்றத்தில் வழக்கறிஞர் M/S மதுஸ்மிட்டாபோரா என்பவரை ஏற்பாடு செய்து கொள்ளவும், உயர்நீதிமன்ற/ உச்சநீதிமன்ற தோராய செலவினம் ரூ. 100000/–ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு– உயர்நீதிமன்ற/ உச்சநீதிமன்ற செலவினங்களுக்கு மன்றம் அனுமதிக்கலாம்.**

**பொருள் எண் :05**

அரக்கோணம் நகராட்சி தூய்மை பாரத இயக்கம் – திடக்கழிவு மேலாண்மை –2018–19 ஆம் ஆண்டின் கீழ் அரக்கோணம் நகராட்சிக்கு சொந்தமான சில்வர்பேட்டை உரக்கிடங்கில் உள்ள குப்பைகளை Bio Mining – Reclaimation of existing d ump yard located at Silver pettai by removing the legacy waste of 54.000 cu.m in Arakkonam Municipality அன்று 23.11.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டதில் பின்வரும் ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|
| 1. | M/S. ஹாரிசிதா அசோஸியேட்ஸ் |
| 2. | M/S. சி.எம்.ஐ எண்டர்பிரைசஸ் |

மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளை தொழில் நுட்ப ரீதியாக கூராய்வு செய்யப்ப்ட்டதில் M/S. சி.எம்.ஐ எண்டர்பிரைசஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியில் பணிக்கான முன் வைப்புத்தொகை இல்லை மேலும் தொழில் நுட்ப ரீதியாக தகுதி பெறவில்லை மேலும் வரப்பெற்ற ஒரு ஒப்பந்தப்புள்ளி M/S. ஹாரிசிதா அசோஸியேட்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை திட்டப்பணியின் அவசியத்தையும் பணிக்கான காலதாமத்தை கருத்தில் கொண்டும் M/S. ஹாரிசிதா அசோஸியேட்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று 07.12.2018 அன்று விலைவிகித ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| சிப்பம் | பணியின் பெயர் | மதிப்பீடு லட்சத்தில் | மதிப்பீட்டைவிட குறைந்த சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | | மதிப்பீட்டைவிட அதிக சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | |
|---|---|---|---|---|---|---|
| 1. | 2. | 3. | 4. | 5. | 6. | 7. |
| 1 | 2 | | ஒப்பந்ததாரர் பெயர் | சத விகிதம் | பெயர் | அதிக சத விகிதம் |
| **1.** | Bio Mining – Reclaimation of existing dump yard located at Silver pettai by removing the legacy waste of 54.000 cu.m in Arakkonam Municipality | 100.00 | ----- | | M/S. ஹாரிசிதா அசோஸியேட்ஸ் | 5.16% |

மேற்படி ஒப்பந்ததாரர் M/S. ஹாரிசிதா அசோஸியேட்ஸ் அவர்களுக்கும் ஒப்பந்தப்புள்ளியின் விலைவிகிதத்தை குறைத்து வழங்குமாறு கடந்த **07.12.2018** அன்று Negotiation கடிதம் அனுப்பப்பட்டு கேட்டுக்கொண்டதன் பேரில் ஒப்பந்ததாரர் M/S. ஹாரிசிதா அசோஸியேட்ஸ் அவர்களின் **07.12.2018**ம் தேதிய கடிதத்தில் கீழ்க்கண்ட விலை விகிதத்தில் பணிகளை செய்ய ஒப்புதல் அளித்துள்ளார்.

| ஒப்பந்ததாரர் | மதிப்பட்டை விட அதிகம், | குறைத்து தர ஒப்புதல் அளித்தது | தற்சமயம் உள்ள விலை விகிதம் மதிப்பட்டை விட அதிகம் |
|---|---|---|---|
| M/S. ஹாரிசிதா அசோஸியேட்ஸ் | 5.16% | **(–)1.84%** | **3.32%** |

மேற்படி ஒப்பந்ததாரரின் ஒத்திசைவு கடிதத்தின் படி M/S. ஹாரிசிதா அசோஸியேட்ஸ் **3.32%** மதிப்பட்டை விட அதிகம் என ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தை குறைத்து கொடுத்துள்ளனர் எனவே, வரப்பெற்றுள்ள ஒப்பந்தபுள்ளிகளை ஏற்று, திட்டப் பணிகள் என்பதால் காலதாமதத்தையும், கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்**

**(ந.க.எண்.1307/2017/இ1)**

**பொருள் எண் :06**

தணிக்கை அரக்கோணம் நகராட்சி 2016–17ஆம் ஆண்டிற்கான தணிக்கை கட்டணம் தொகை ரூ.54207/– செலுத்துமாறு உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை, வேலூர் அவர்களின் கடித எண்.ப.வெ.எண்.11/அ2/2018 நாள்.16.10.2018–ல் கோரப்பட்டுள்ளதால், இத்தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து செலுத்த மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:- உள்ளாட்சி நிதித் தணிக்கை கட்டணம் தொகை ரூ.54,207/– செலுத்த மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண்.458/2013/பி2)**

**பொருள் எண் :07**

இளநிலை பொறியாளர், இ(ம) ப /தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், கிழக்கு பிரிவு அரக்கோணம் அவர்களின் கடித எண்.AE/JE/O&M/AKM/F.App. Tracking /D.No519/2018 நாள்.28.01.2018ல் கடிதத்தின்படி அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.31 டி.என் நகர் 3–வது சந்து தெருவில் புதியதாக தெருமின் விளக்கு அமைக்க மின் கம்பம் அமைத்து மின் இணைப்பு வழங்குவதற்கான கட்டணம் ரூ.27260/– (இருபத்து ஏழாயிரத்து இரு நூற்று ஆறுபது)க்கான கேட்பு வரப்பெற்றுள்ளது. பொதுமக்களின் போக்குவரத்து நலனை கருத்தில் கொண்டு மேற்படித்தொகையினை செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்**

**ந.க.எண்.819/2018/இ1**

**பொருள் எண் :08**

அரக்கோணம் நகராட்சிக்கு சொந்தமான கீழ்காணும் பகுதிகளில் பின்வரும் பணிகளை செய்ய வேண்டியுள்ளது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | நேருஜி நகர் 8–வது தெருவில் RCC பைப் சிறுபாலம் அமைத்தல் மற்றும் நகராட்சிக்கு சிண்டெக் டேங்குகள் சப்ளை செய்தல். | 3.00 |
| 2. | தியாகி சின்னசாமி தெருவில் RCC பைப் சிறுபாலம் அமைத்தல். | 4.00 |
| 3. | விண்டர்பேட்டை மேல்நிலை நீர்தேக்க தொட்டி அருகில் சிமெண்டு சாலை அமைத்தல். | 10.00 |
| 4. | காலிவாரி கண்டிகை பிரதான சாலை, திருப்பூர் குமரன் தெரு மற்றும் பண்டித ஜவஹார்லால் நேரு தெருவில் சாலையை சமன் செய்து சீரமைத்தல். | 9.00 |
| 5. | வி.பி கோயில் தெரு, ஏ.என் கண்டிகை 2–வது 3–வது மற்றும் 4–வது தெருக்களில் சாலையை சமன் செய்து சீரமைத்தல் | 7.00 |
| 6. | கிழக்கு தர்மராஜ கோயில் தெருவில் சிமெண்டு சாலை மற்றும் ஆழ்துளை குழாய் கிணற்றிற்கு சிறு மின் விசை பம்பு பொருத்தி இயக்குதல். | 4.00 |
| 7. | புதிய பேரூந்து நிலையத்தில் கழிப்பிடம் பராமத்து பணிகள் செய்தல் மற்றும் பேரூந்து கால அட்டவணை பலகை அமைத்தல், | 6.00 |
| 8. | கணேஷ் நகர் 6–வது தெருவில் சிறுபாலம் கட்டுதல். | 1.50 |

மேற்காணும் பணிகளை பொதுமக்களின் நலன் கருதி செய்ய வேண்டியுள்ளதால் மேற்படி பணிகளுக்கும், பணிக்கான தொகையினை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்**

**ந.க.எண்.887/2018/இ1**

**பொருள் எண் :09**

அரக்கோணம் நகராட்சியில் பொதுமக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய கீழ்காணும் பகுதிகளில் பின்வரும் பணிகளை செய்ய வேண்டியுள்ளது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | தக்கோலம் தலைமை நீரேற்று நிலையத்தில் Bus Bar, Control Pannel ஆகியவற்றை புதியதாக அமைத்து Terminals, Contact Kit, Mat, CT Coil ஆகியவற்றை சரி பார்த்து மாற்றியமைத்தல். | **2.40** |
| 2. | தக்கோலம் மற்றும் கல்லாறு நீரேற்றும் நிலையத்தில் தனியர் ஆட்களை கொண்டு பராமத்து இயக்குதல். | **9.65** |
| 3. | தக்கோலம் மற்றும் கல்லாறு நீரேற்றும் நிலையத்தில் உள்ள Electronic Digital Flow Meter பழுதுபார்த்தல். | **5.00** |
| 4. | விண்டர்பேட்டை மற்றும் ஜுப்ளி ரோடு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியில் Chlorination Pump புதியதாக மாற்றி அமைத்தல். | **5.50** |

மேற்காணும் பணிகளை பொதுமக்களின் நலன் கருதி செய்ய வேண்டியுள்ளதால் மேற்படி பணிகளுக்கும், பணிக்கான தொகையினை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்**

**ந.க.எண்.887/2018/இ1**

**பொருள் எண் :10**

அரக்கோணம் நகராசிக்குட்பட்ட கீழ்காணும் நகராட்சி பள்ளியில் பின்வரும் பணிகளை செய்ய வேண்டியுள்ளது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | காந்தி நகர் நகராட்சி நடுநிலைப் பள்ளியில் மின்சாரம், கதவுகள் மற்றும் பராமத்து பணிகள் செய்தல் | **5.50** |
| 2. | காந்தி நகர் நகராட்சி நடுநிலைப் பள்ளியில் முதல் மாடியில் கூடுதல் வகுப்பறை கட்டுதல். | **10.00** |

மேற்காணும் பணிகளை பள்ளி மாணவர்களின் நலன் கருதி செய்ய வேண்டியுள்ளதால் மேற்படி பணிகளுக்கும், பணிக்கான தொகையினை நகராட்சி கல்வி நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்**

**ந.க.எண்.887/2018/இ1**

**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்(பொ)**
**அரக்கோணம் நகராட்சி**